# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 09 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம் :- 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..........................

## பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) 'இந்த வெளிவிஷயம் சாக்ரடீஸின் உள்ளத்தைப் பாதிக்கவில்லை.' இதில் உள்ளம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
1) அறம் 2) மறம் 3) அகம் 4) புறம்.

02) 'இன்று குளிர்மையான காற்று வீசுகின்றது' குளிர்மை என்பதன் ஒத்தகருத்து
1) தன்மை 2) சீதளம் 3) வெம்மை 4) மாருதம்

03) 'இரவைப் பகலாக்க முயலும் செயற்கை ஒளி இல்லை' என்பதில் செயற்கை என்பதன் எதிர்ச்சொல்
1) இயற்கை 2) மருட்கை 3) வேட்கை 4) ஆக்கை.

04) 'அகன் அமர்ந்து ஈதலின் நன்றே..........' என்பதில் ஈதல் என்பதன் எதிர்ப்பதம்
1) வேண்டல் 2) போற்றல் 3) கொடுத்தல் 4) ஏற்றல்

05) கணவனை இழந்தவள்
1) விதவை 2) தாய் 3) செவிலி 4) சொல்லாள்

06) பசு மேய்ப்பவன் ஆயன் என்பது போல விமானம் செலுத்துபவன்.
1) விமானி 2) வலவன் 3) மீகாமன் 4) பாகன்

07) நிறுத்தக் குறிகளில் விட்டிசைக் குறி எனப்படுவது.
1) : 2) ; 3) - 4) ( )

08) Species [ஸ்பெசீஸ்] என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்.
1) பண்பலை 2) உணர் கொம்பு 3) பயனாளர் 4) இனங்கள்

09) பெருமை, வலி, வீரம், வெற்றி என்பன குறிக்கும் ஒரு சொல்
1) விரல் 2) விறல் 3) சிறப்பு 4) உயர்வு

10) ஐம்பதாவது ஆண்டின் நிறைவில் எடுக்கப்படும் விழா.
1) வெள்ளி விழா 2) வைரவிழா 3) பொன் விழா 4) அமுத விழா

11) கமலா கலகலவென்ச் சிரித்தாள். இங்கு கலகல என்பது.
1) இணைமொழி 2) அடுக்குமொழி 3) அடுக்கிடுக்கு மொழி 4) இரட்டைக்கிழவி

12) வீண்செலவு செய்யினும் அக்கணக்கினையும் அறிந்திருத்தல் நன்று – எனும் பொருள் தரும் பழமொழி
1) வளவனாயினும் அளவறிந்து அளித்து உண்.
2) விரலுக்குத் தக்கது தான் வீக்கம்.
3) பாத்திரமறிந்து பிச்சையிடு.
4) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

13) 'காது கொடுத்தல்' எனும் மரபுத் தொடரின் பொருள்
1) ஏமாற்றுதல் 2) கோள் சொல்லுதல்
3) அவதானித்துக் கேட்டல் 4) இரகசியம்

14) 'ஆழமறியாது காலை விடாதே' என்ற பழமொழியின் கருத்து.
1) ஆபத்தில் உதவ வேண்டும்.
2) ஆழம் அறிந்த பின் நீரில் இறங்குதல் வேண்டும்.
3) எதனையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.
4) மூத்தோர் சொல்லை மதிக்க வேண்டும்.

15) பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி அல்லாதது.
1) குடுகுடு 2) ஓடுஓடு 3) பளபள 4) சலசல

16) 'வெற்றிலை நட்டான்' என்பதில் இடம்பெறுகின்ற ஆகுபெயர்.
1) பொருளாகு பெயர் 2) இடவாகு பெயர்
3) சினையாகு பெயர் 4) காலவாகு பெயர்.

17) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமைவது.
1) புத்திசாலி 2) வானொலி 3) வானவில் 4) சுடுகலன்

18) ஏழாம் வேற்றுமையின் பொருளாக அமைவது.
1) கிழமை 2) ஒப்பு 3) கருத்தா 4) இடம்

19) பின்வருவனவற்றுள் பிறவினையாக அமைவது.
1) ஊட்டினாள் 2) ஆடினாள் 3) பாடினாள் 4) உண்டான்.

20) 'வெளிநாடு சென்ற தர்மினி நாடு திரும்பினாள்' இவ்வாக்கியம்.
1) தனிவாக்கியம் 2) கூட்டுவாக்கியம் 3) கலப்பு வாக்கியம் 4) வினையடைத் தொடர்

21) பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற சொல்.
1) நிறுத்தல் குறிகள் 2) பிரச்சனை 3) செயப்படுபொருள் 4) தேனீர்

22) குமார் வேகமாக ஓடினான். அவனால் முதற்பரிசைப் பெற முடியவில்லை. இவ் இரண்டு வாக்கியங்களையும் இணைப்பதற்குப் பொருத்தமற்ற இணைப்பிடைச் சொல்
1) ஆகவே 2) எனினும் 3) ஆனால் 4) இருப்பினும்

23) செயப்படுபொருள் குன்றாத வினையாக அமைவது.

1) ஓடினான் 2) சிரித்தான் 3) சிந்தித்தான் 4) சிறந்து விளங்கினான்

24) பின்வரும் சொற்களில் காரண இடுகுறிப் பெயராக அமைவது.

1) மாமரம் 2) முள்ளி 3) மண்வெட்டி 4) கணினி

25) கூட்டு வினையாக அமைந்த சொல்.

1) தட்டு 2) தட்டினான் 3) தட்டுங்கள் 4) தட்டிக்கேள்

26) இரண்டு கண்களும்....................

1) சிவந்தது 2) சிவந்தவை 3) சிவந்தன 4) சிவப்பாகியது.

27) திருவிழாவைக் காண மக்கள் கூட்டம் அலை அலையாக.

1) சென்றது 2) சென்றன 3) செல்லுகின்றன 4) சென்றனர்

28) பிழையற்ற வாக்கியத்தைத் தெரிவு செய்க.

1) நான் பல்கலைக்கலகத்திற்குச் சென்றேன்.
2) நான் பல்களைக்கழகத்திற்குச் சென்றேன்.
3) நான் பல்கலைக்கழகத்திற்குச் சென்றேன்.
4) நான் பல்கழைக்களகத்திற்குச் சென்றேன்.

29) இலங்கையில் ஒவ்வோர் ஆண்டும் குடிசன ........................ செய்யப்படுகிறது.

1) தொகை மதிப்பு 2) பாதீடு 3) பரிந்துரை 4) வரவு – செலவு.

30) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்திப பந்தியாக்குக.

அ) அவற்றுள் கம்பராமாயணம் ஈடிணையற்றது.
ஆ) இது தொன்மையான நாகரிகம் படைத்த நாடு.
இ) அதனால் இராமாயணத்தைப் பாடிய கம்பர் கல்வியில் பெரிதாகப் போற்றப்படுகின்றார்
ஈ) அங்கே பழங்காலம் தொட்டு பல நூல்கள் தோன்றி வருகின்றன.
உ) தமிழ்நாடு பாரத கண்டத்தின் தென் பகுதியில் உள்ளது.

1) உ,ஆ,ஈ,அ,இ 2) அ,ஆ,உ,இ,ஈ 3) உ,ஈ,ஆ,இ,அ 4) ஈ,அ,உ,ஆ,இ

(30x1=30 புள்ளிகள்)

## பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. நீர் உமது வகுப்பறையில் மேற் கொண்ட கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) நீர் வகுப்பறையில் மேற்கொண்ட கணிப்பீடு யாது?

ஆ) இக் கணிப்பீட்டை மேற்கொள்வதற்குத் தகவல் பெற்றுக் கொண்ட வழிமுறைகள் 3 தருக?

இ) இக் கணிப்பீட்டின் போது நீர் எதிர் கொண்ட பிரச்சினைகள் எவை?

ஈ) இக் கணிப்பீட்டிற்காக ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் இரண்டு தருக?

(5x2 = 10 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1) இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்.
2) இன்சொல் பேசுவதன் மகத்துவம்.
3) அறிவைப் பெருக்க வாசிப்பை நேசிப்போம்.
4) மாணவர்களும் தொடர்பாடல் சாதனங்களும்.

(15 புள்ளிகள்)

03. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 75 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

1) உமது பாடசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழா பற்றி அறிக்கை எழுதுக.

**அல்லது**

2) நீர் கண்டுகளித்த மலைநாட்டுச் சுற்றுலா பற்றிய அனுபவங்களை உமது நண்பிக்கு/ நண்பனுக்கு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) சின்னப் பூச்சியின் உருவ அமைப்பை கதாசிரியர் எவ்வாறு வருணிக்கிறார்?
2) பண்பட்ட இனிய சொற்கள் எத்தகைய நன்மைகளை வழங்கும்?
3) "நாகரிகப் பெருவெளிச்சம்" எத்தகைய தீமைகளை ஏற்படுத்தியுள்ளது?
4) உலகில் மிகப் பழங்காலத்தனவான இரு பூச்சி இனங்கள் எவை?
5) வெகுமதி, தண்டனை பற்றி தந்தை கருதுவது யாது?

(5x2=10 புள்ளிகள்)

05. பின்வரும் குறள்களின் பொருளை உமது மொழிநடையில் எழுதுக.

அ. துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

ஆ. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

(2 ½ X2=5 புள்ளிகள்)

06. பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

கையினில் மண்வெட்டி கொண்டுமே – உயிர்க்
காதலி யானவள்பின்வர
வெய்யில் எழுந்திரு முன்பவன் - தன்
விளைநிலம் நாடிப் புகுவனே.
பாடுபட் டென்றும் உழைப்பதை – உயிர்
பண்பென எண்ணிடும் செய்கையான்
பாலை வனமதைக் கையினால் - நல்ல
சோலை வனமென ஆக்குவான்.

ஏழை எளியவர் வாழவே – அன்பு
என்றுஞ் சொரிந்திடும் ஈகையான்
கூழெ னினும்பிறர்க் கீந்தலால் - தான்
குடித்த றியாக் குணக் குன்றவன்.

01) இப் பாடலில் குறிப்பிடுபவன் யார்?
02) உயர் பண்பாக இவன் கருதுவது எதனை?
03) இவனது ஈகைப் பண்பினைக் கவிஞர் எடுத்துரைக்கும் முறையினை விளக்குக?
04) "பாலை வனமதைக் கையினால் நல்ல சோலைவனமென ஆக்குவான்" இத் தொடரின் பொருளைத் தருக?
05) "குணக்குன்று" என்பது என்ன அணி? விளக்குக.

(5x2=10 புள்ளிகள்)

07. பின்வரும் தொடர்களின் பொருள் விளங்க வாக்கியம் எழுதுக.
1) குமுறிக் குமுறி.
2) நெறுநெறு.
3) கொத்துக் கொத்தாக.
4) கொஞ்சிக் குலாவி.
5) அல்லும் பகலும்.

(5x2=10 புள்ளிகள்)

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

**075 287 1457**